2019 ஜூலை 15]

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

அதேபோன்று, உசிலம்பட்டி தொகுதியில் இருக்கின்ற பல்வேறு கிராமங்களுக்கு கால்நடை கிளை நிலையங்கள் வேண்டுமென்று சொல்லியிருக்கின்றார்கள். கடந்த ஆண்டு ஒரு கால்நடை கிளை நிலையம் அமைக்கப்பட்டிருக்கிறது. அதேபோல உசிலம்பட்டி தொகுதி, செல்லம்பட்டியில் ஒரு கால்நடை மருந்தகம் தரமுயர்த்தப்பட்டிருக்கிறது. மேலும், இந்த ஆண்டு மேற்படி உறுப்பினர் கோரிய பகுதிகளுக்கு கால்நடை கிளை நிலையங்கள் அமைக்க சாத்தியக்கூறுகள் இருந்தால் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய பார்வைக்குக் கொண்டு சென்று அமைத்துத் தரப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 106, மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. சௌந்தரபாண்டியன், மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர் அவர்கள்.*

106—

மருத்துவமனையைத் தரம் உயர்த்துதல்

***2821—திரு. அ. சௌந்தரபாண்டியன்:**

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

லால்குடி தொகுதி, லால்குடி அரசு மருத்துவமனையைத் தரம் உயர்த்தி புதிய கட்டடங்கள் கட்ட அரசு முன்வருமா?

மாண்புமிகு டாக்டர் சி. விஜய பாஸ்கர், மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

திருச்சி மாவட்டம், லால்குடி அரசு மருத்துவமனை 139 படுக்கைகளைக் கொண்டுள்ளது. நாள் ஒன்றுக்கு 800 புற நோயாளிகளும், 85 உள்நோயாளிகளும் வந்து சிகிச்சை பெறுவதோடு, 30 பிரசவங்களும் நடக்கக்கூடிய மருத்துவமனையாகவும் உள்ளது. மாண்புமிகு உறுப்பினர் கேட்கும் வசதிகளை அந்த நோயாளிகளின்

எண்ணிக்கைக்கேற்ப மாண்புமிகு அம்மாவின் அரசு ஆய்வு செய்து ஏற்படுத்திக் கொடுக்கும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. சௌந்தரபாண்டியன் அவர்கள்.*

திரு. அ. சௌந்தரபாண்டியன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, லால்குடி அரசு மருத்துவமனையில் நாள் ஒன்றுக்கு 700 முதல் 800 நபர்களும் மழைக் காலங்களில் 1,000–க்கும் மேற்பட்ட நபர்கள் புறநோயாளிகளாகவும், மேலும் நாள் ஒன்றுக்கு 80 முதல் 100 நபர்களும், மழைக் காலங்களில் 150–க்கும் மேற்பட்டவர்கள் உள்நோயாளிகளாகவும் வந்து சிகிச்சை பெற்று வருகின்றனர். அனைவருக்கும் சிகிச்சையளிக்கின்ற இந்தப் பகுதியில் உள்ள கட்டடங்களில் 5 கட்டடங்கள் பயன்பாட்டுக்குத் தகுதியில்லாதவையாக இருக்கின்றன. 5 கட்டடங்கள் பயன்படுத்தப்படாமல் உள்ளன. அதேபோன்று அருகிலுள்ள ஒரு பழமைவாய்ந்த கட்டடத்தில் குழந்தைகள் பகுதி, மகளிர் பகுதி, ஆண்கள் பகுதி என அனைத்துத் தரப்பினரும் உள்நோயாளிகளாக சிகிச்சை பெற்று வருகின்றனர். கடந்த நான்கு ஆண்டுகளுக்கு முன்பு சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து கட்டப்பட்ட ஒரு சிறிய கட்டடத்தில்தான் 20–க்கும் மேற்பட்டவர்கள் உள்நோயாளிகளாக சிகிச்சை பெற்று வருகின்றனர். இதுகுறித்து மாவட்ட அதிகாரிகளிடத்தில் கூறியபொழுது, 'உங்கள் பகுதிக்கு நாங்கள் கட்டட வசதி ஏற்படுத்தித் தருவோம்' என்று கூறினார்கள். அதேபோன்று சென்னையிலுள்ள அதிகாரிகளிடத்திலே கேட்டபொழுது, 'அந்த மருத்துவமனைக்கு வந்து ஆய்வு செய்திருக்கிறோம். உங்கள் பகுதிக்குத் தேவையான கட்டட வசதிகளை ஏற்படுத்தித் தருவோம்' என்று கூறினார்கள். எனவே மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நவீன வசதியுடன்கூடிய கட்டடத்தை எங்கள் பகுதிக்கு உருவாக்கித் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு டாக்டர் சி. விஜய பாஸ்கர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் குறிப்பிடுகின்ற

2019 ஜூலை 15]

அந்தப் பழைய கட்டடங்கள் பயன்பாட்டுக்கு உகந்ததாக இல்லையென்றால், பொதுப் பணித் துறையினுடைய கருத்துருவைப் பெற்று வருங்காலத்தில் லால்குடி அரசு மருத்துவமனைக்கு புதிய கட்டடங்களை மாண்புமிகு அம்மாவின் அரசு கட்டித் தரும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. சௌந்தரபாண்டியன் அவர்கள்.*

முற்பகல் 10–40

திரு. அ. சௌந்தரபாண்டியன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, லால்குடி பகுதியிலுள்ளவர்கள், லால்குடி மருத்துவமனையில் சிகிச்சை பெற முடியாத சூழ்நிலையில் மேல் சிகிச்சைக்காக திருச்சி மருத்துவக் கல்லூரி மருத்துவமனைக்குச் சென்று சிகிச்சை பெறுகின்றனர். இடவசதி நல்ல நிலையில் இருக்கும் ஸ்ரீரங்கம் அரசு மருத்துவமனையில் பலர் சிகிச்சை பெறுகின்றனர். லால்குடி அரசு மருத்துவமனைக்கு அருகிலிருப்பவர்கள் திருமானூருக்கு மேற்குப் பகுதியிலுள்ள ஊர்களிலிருந்தும், ஸ்ரீரங்கம் கிளிக்கூட்டுக்கு அருகிலுள்ள ஊர்களிலிருந்தும் வந்து சிகிச்சை பெறுகின்றனர். திருச்சி மருத்துவக் கல்லூரி மருத்துவமனை, மாவட்ட மருத்துவமனையான மணப்பாறை மருத்துவமனை நீங்கலாக, அதிகமான நபர்கள் உள்நோயாளிகளாகவும், புற நோயாளிகளாகவும் வந்து சிகிச்சை பெறுகின்ற இடம், திருச்சி மாவட்டத்திலுள்ள தாலுகா மருத்துவமனைகளில் ஒன்றான லால்குடி அரசு மருத்துவமனையாகும். இந்தப் பகுதியிலுள்ள ஏழை விவசாயிகள், விவசாயத் தொழிலாளர்கள், அவர்தம் குடும்பத்தைச் சேர்ந்தவர்கள் மட்டுமே வருகை தந்து சிகிச்சை பெறக்கூடிய அரசு மருத்துவமனையாக இது உள்ளதால், நவீன வசதியுடன்கூடிய அறுவை சிகிச்சை அரங்கம் அமைத்து, நவீன மருத்துவம், உள்நோயாளிகள், வெளிநோயாளிகள் வந்து சிகிச்சை பெறக்கூடிய வகையிலே வசதியான ஒரு நவீன கட்டடத்தை இவ்வாண்டே உருவாக்கித் தர மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர் அவர்கள்.*

[2019 ஜூலை 15

மாண்புமிகு டாக்டர் சி. விஜய பாஸ்கர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பேசியபோது குறிப்பிட்ட Geriatric Ward, SNCU, OT உள்பட அனைத்துப் பிரிவுகளுமே லால்குடியிலே இருக்கின்றன. மாண்புமிகு உறுப்பினர் அவர்களே, '80 முதல் 100 பேர் வரை உள்நோயாளிகளாக வந்து அங்கே சிகிச்சை பெறுகிறார்கள்' என்று கூறினார்கள். அங்கிருக்கக்கூடிய படுக்கை வசதிகளின் எண்ணிக்கை 139 ஆகும். எனவே, அங்கிருக்கக்கூடிய படுக்கை வசதிகளுக்கும் குறைவாகத்தான் நோயாளிகள் வந்து கொண்டிருக்கிறார்கள். தாங்கள் குறிப்பிடுகின்ற அந்தப் பழமையான கட்டடத்திற்குப் பதிலாக புதிய கட்டட வசதியை வருங்காலங்களில் மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு செய்து கொடுக்கும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திருமதி ப. மனோன்மணி அவர்கள்.

திருமதி ப. மனோன்மணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமைதி, வளம், வளர்ச்சி என்ற அடிப்படையில் தமிழக மக்களின் நெஞ்சங்களில் நீக்கமற நிறைந்திருக்கும் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆட்சியினைச் சிறப்பாக நடத்தி வரும் விவசாயிகளின் விடிவெள்ளி தமிழகத்தின் நிரந்தர முதலமைச்சர் அண்ணார் அவர்களை வணங்கி, மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்களையும், மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களையும் வணங்குகிறேன்.

சேலம் மாவட்டம், எனது வீரபாண்டி சட்டமன்றத் தொகுதியைச் சேர்ந்த நையினாம்பட்டியில் அரசு ஆரம்ப சுகாதார நிலையம் இயங்கி வந்த நிலையில், அது அரசு மருத்துவமனையாகத் தரமுயர்த்தப்பட்டது. அங்கு வழங்கப்பட்ட சேவைகள் அனைத்தும் தற்போது வீரபாண்டி அரசு ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு மாற்றப்பட்டன. இதனால் நையினாம்பட்டி ஆரம்ப சுகாதார நிலையத்திற்குட்பட்ட ஆட்டையாம்பட்டி, எஸ். பாப்பாரப்பட்டி, கைப்புதூர், நல்லியம்பாளையம், சென்னகிரி, ராஜ்பாளையம் போன்ற பகுதிகளிலுள்ள பொதுமக்கள், குழந்தைகள், கர்ப்பிணிகள் உள்ளிட்டோர் வீரபாண்டி அரசு ஆரம்ப சுகாதார நிலையம் தொலைவாக இருப்பதால், மருத்துவச் சேவைகள் பெறுவதில் மிகவும் சிரமம் அடைகின்றனர். எனவே, எரிசனம்பட்டியில் புதிய

2019 ஜூலை 15]

அரசு ஆரம்ப சுகாதார நிலையம் அமைத்துக் கொடுக்க ஆவன செய்ய வேண்டுமென தங்கள் வாயிலாக மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு டாக்டர் சி. விஜய பாஸ்கர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கையை நிதிநிலைமைக்கேற்ப அரசு பரிசீலிக்கும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. கு. பிச்சாண்டி அவர்கள்.*

திரு. கு. பிச்சாண்டி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கீழ்பெண்ணாத்தூர் புதிய தாலுகாவாக அறிவிக்கப்பட்டிருக்கிறது. எனவே, அங்குள்ள மருத்துவமனையைத் தரமுயர்த்த வேண்டும். ஆனால், அங்கு ஏற்கெனவே 30 படுக்கை வசதி கொண்ட ஒரு கட்டடம் கட்டப்பட்டிருக்கிறது. ஆகவே, அந்தக் கட்டடத்தை, தரமுயர்த்தப்படவுள்ள தாலுகா மருத்துவமனைக்குப் பயன்படுத்தினால் அரசுக்குச் செலவு ஏற்படாது; அங்கே டாக்டர்களை நியமித்துக்கொள்ளலாம். ஆகவே, அங்குள்ள மருத்துவமனையை புதிய தாலுகா மருத்துவமனையாக தரமுயர்த்தி, அந்தக் கட்டடத்தில் அதனை இயக்க அரசு முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.*

மேலும், மருத்துவம் பயில்வதற்கு திருவண்ணாமலை மருத்துவக் கல்லூரி 100 இடங்களைக் கொண்டிருக்கின்றது. தற்போது கரூர், புதுக்கோட்டை ஆகிய இடங்களில் புதியதாக ஆரம்பிக்கப்படும் மருத்துவக் கல்லூரிகளுக்கு 150 இடங்கள் கொடுக்கப்பட்டிருக்கின்றன. அதேபோன்று, திருவண்ணாமலை மருத்துவக் கல்லூரியின் இடங்களையும் 150 ஆக இவ்வாண்டு அதிகரிக்க வேண்டும்.

அடுத்து, மருத்துவமனைகளில் சர்க்கரை நோயாளிகளுக்குத் தேவையான Metformin *என்ற மருந்துக்குத் தட்டுப்பாடு இருக்கிறது என்று சொல்கிறார்கள். அந்த* Metformin *மருந்தை மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் வழங்குவதற்கும் ஆவன செய்ய வேண்டும்.*

அதேபோன்று, தரமுயர்த்தப்படக்கூடிய மருத்துவமனைகளை ஏற்கெனவே கட்டப்பட்ட கட்டடங்களில் இயங்கச் செய்து, 5 டாக்டர்களை நியமித்து, கிராமப்புற மக்களுக்கு மருத்துவ வசதி செய்து தர அரசு முன்வருமா என்பதையும் அறிய விரும்புகிறேன். தற்போது, மத்திய அரசு அதிக மருத்துவக் கல்லூரிகளை மாநிலங்களுக்குத் தருகிறோம் என்று சொல்லியிருக்கிறார்கள். அரசு மருத்துவக் கல்லூரிகள் அதிக அளவில் உள்ள இடம் தமிழகம் ஆகும். ஆகவே, தற்போது மத்திய அரசு மருத்துவக் கல்லூரிகளை வழங்க தயாராக இருக்கின்ற காரணத்தால், அனைத்து மாவட்டங்களிலும் மருத்துவக் கல்லூரிகளைத் துவக்க அரசு முன்வருமா என்பதையும் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர் அவர்கள்.

முற்பகல் 10–45

மாண்புமிகு டாக்டர் சி. விஜய பாஸ்கர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் ஒரே கேள்வியில் நான்கு கோரிக்கைகளை வைத்திருக்கிறார்கள். ஒன்று, கீழ்பெண்ணாத்தூர், அது வருவாய்த் துறையின் மூலமாக தாலுகாவாக தரமுயர்த்தப்பட்டிருந்தால், அங்கே தாலுகா மருத்துவமனை ஏற்படுத்தப்படும்; அது அரசினுடைய கொள்கை. இரண்டாவது, திருவண்ணாமலை மருத்துவக் கல்லூரியில் 100 இடங்கள் இருக்கின்றன. தற்போது புதியதாக திறக்கப்படும் கரூர், புதுக்கோட்டை போன்ற மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகளில் 150 இடங்கள் இருக்கின்றன. முன்பு MCI–ல் 100 இடங்கள் கொடுத்த காரணத்தினால், அப்போது புதிய மருத்துவக் கல்லூரிகளைத் தொடங்குகின்றபோது 100 என்ற எண்ணிக்கையுடன் திறந்தோம். Multi–speciality மருத்துவமனையில்கூட 100 இடங்கள்தான். அதற்குப் பின்னர் விதிகள் மாற்றப்பட்டு, MCI 150 இடங்கள் என்று கொடுத்ததால் நாம் apply செய்யும்போதே கரூருக்கும், புதுக்கோட்டைக்கும் 150 இடங்களுக்கு apply செய்தோம். அந்த 150 இடங்கள் கிடைத்திருக்கின்றன. இப்போது அந்த existing 100 இடங்களை மீண்டும் கூடுதலாக 150 இடங்களாக்க வேண்டுமென்றால், we have to wait for 10 years as per MCI guidelines. 10 ஆண்டுகள் காத்திருந்து, 10 ஆண்டுகள் கழிந்த பிறகுதான் additional seats–க்கு நாம் apply செய்ய முடியும். இதில் எந்தத் தொய்வும் இல்லாமல் அரசு ஒவ்வோர் ஆண்டும் அந்த எண்ணிக்கையை

2019 ஜூலை 15]

increase செய்து வருகிறது. 10 ஆண்டுகள் முடிந்ததற்குப் பின்னால் திருவண்ணாமலையில் அந்த எண்ணிக்கை கூடுதலாக ஆக்கப்படும். அந்த வகையில்தான் இப்போது மதுரையிலும், திருநெல்வேலியிலும் 150 இடங்களிலிருந்து 250 இடங்களாக உயர்த்தியிருக்கிறோம். இந்தியாவிலேயே எந்த மாநிலத்திலும் ஓர் ஆண்டில் 350 M.B.B.S. இடங்கள் அதிகரிக்கப்படவில்லை. (மேசையைத் தட்டும் ஒலி) இந்த ஆண்டு 350 M.B.B.S. இடங்கள் அதிகரிக்கப்பட்டுள்ளன.

அடுத்து, தாங்கள் சொன்னதுபோன்று மத்திய அரசு தருவதற்குத் தயாராக இருக்கிறது. நாம் தொடர்ந்து மத்திய அரசை வலியுறுத்திக் கொண்டிருக்கிறோம். அதிலும் குறிப்பாக, புதிய மருத்துவக் கல்லூரிகளுக்கு விண்ணப்பிக்கும்பொழுது மத்திய அரசு வளர்ந்த மாநிலங்களுக்கு முன்னுரிமை அளிப்பதில்லை. இந்தியாவிலேயே தமிழகம் சுகாதாரத் துறையிலே ஒரு முதன்மை மாநிலமாக இருக்கின்ற காரணத்தினால், முன்னோடி மாநிலமாக இருக்கின்ற காரணத்தினால் (மேசையைத் தட்டும் ஒலி) அவர்கள் அப்படி முன்னுரிமை அளிப்பதில்லை. இருந்தாலும்கூட, இராமநாதபுரம் மாவட்டத்திற்கும், விருதுநகர் மாவட்டத்திற்கும் Aspirational Districts என்ற அடிப்படையில், இந்த 2 மாவட்டங்களுக்கும் முன்னுரிமை அளிக்க வேண்டுமென்று சமீபத்தில்கூட மாண்புமிகு பாரதப் பிரதமரிடம் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் வலியுறுத்தியிருக்கிறார்கள்; விரைவில் நல்ல செய்தி வரும் என்று நம்புகின்றோம்.

மாண்புமிகு உறுப்பினர் அவ்வளவுதானே கேட்டீர்கள்? (குறுக்கீடு) ஆம், Metformin. அது உங்களுக்குத் தெரியும். நல்ல quality drug, basic drug. அதன் supply–ல் எந்தத் தடையும் இல்லை என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. க.நா. விஜயகுமார் அவர்கள்.

திரு. க.நா. விஜயகுமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களை வணங்கி, அம்மா அவர்களின் வழியிலே சிறப்பான நல்லாட்சி நடத்துகின்ற மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கும், மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்களுக்கும் எனது வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திருப்பூர் வடக்கு சட்டமன்றப் பேரவைத் தொகுதி, கணக்கம்பாளையம் ஊராட்சிப் பகுதியில் 1972–லிருந்து தாய்-சேய் நல விடுதியாக உள்ள மருத்துவமனையை ஆரம்ப சுகாதார நிலையமாக மாற்றித்தர அரசு முன்வருமா என்பதைத் தங்கள் வாயிலாகக் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு டாக்டர் சி. விஜய பாஸ்கர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொதுவாக தாய்–சேய் நல விடுதிகள், Sub–centres–ஐ ஆரம்ப சுகாதார நிலையமாக மாற்றுகின்ற திட்டம் என்பது அரசினுடைய கொள்கையிலே இல்லை. தாங்கள் குறிப்பிடுகின்ற பகுதியிலே உரிய விதிகளைப் பூர்த்தி செய்வதாக இருந்தால், அங்கு புதிய ஆரம்ப சுகாதார நிலையம் ஆரம்பிப்பதற்குண்டான வாய்ப்புகளை வரும் காலத்திலே அரசு ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 107, மாண்புமிகு உறுப்பினர் திரு. எ.பி. சக்திவேல், மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.*

107—

மலர் விற்பனைக் கூடம்

***35026—திரு. எ.பி. சக்திவேல்:**

மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் தெற்கு தொகுதியில் மலர் விற்பனைக் கூடம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. இரா. துரைக்கண்ணு, வேளாண்மைத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,